எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பாஜகவை வீழ்த்த வேண்டும்

சென்னை, அக்.31: எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து பாஜகவை வீழ்த்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியப் பொதுச்செயலர் டி.ராஜா வலியுறுத்தினார்.

அந்தக் கட்சியின் தேசிய பொதுச் செயலாளராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட டி.ராஜா, சென்னை தியாகராயநகரில் உள்ள கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது:

குஜராத் மாநிலத்தில் தொங்கு பாலம் இடிந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். புதுப்பிக்கப்பட்ட பாலம் எப்படி இடிந்தது என்பது குறித்து அந்த மாநில அரசு விசாரணை நடத்த வேண்டும்.

இரண்டாவது முறையாக பிரதமராக மோடி பொறுப்பேற்ற பிறகு மதவெறியை மக்கள் மனதில் பாஜக திணிக்கிறது. இந்திய ரூபாயின் மதிப்பு இத்தகைய வீழ்ச்சி அடைய காரணம் மோடி அரசு தான். உலக அளவில் பசியால் வாடும் மக்கள் இந்தியாவில் அதிகம் இருப்பதாக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

அதானி, அம்பானி போன்றவர்களெல்லாம் உலக பணக்காரர்கள் பட்டியலில் போட்டி போட்டுக்கொண்டுள்ளனர். ஆனால், உள்நாட்டில் பசி, பட்டினி எனஇளைஞர்கள், குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. பாஜக, ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றால் இந்திய குடியரசு சட்டம் அடிப்படையாகத் தகர்க்கப்படுகிறது.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவை அதிகாரத்திலிருந்து வீழ்த்த மாநில கட்சிகள், மதச்சார்பற்ற கட்சிகள், இடதுசாரிகள் உள்ளிட்டவை ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

ஆளுநர்-மாநில அரசு இடையே கேரளம், புதுவை உள்ளிட்ட மாநிலங்களில் மோதல்கள் தொடர்ந்து வருகின்றன. இதனால், இந்திய ஜனநாயக அமைப்பில் ஆளுநர்கள் தேவை தானா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தனது பொறுப்பிலிருந்து விலகி, எங்கேயாவது ஒரு கட்சியில் இணைந்து எதையாவது பேசட்டும்.

அதை விட்டுவிட்டு சனாதனம், மற்ற விஷயங்கள் குறித்து மாநில ஆளுநராக இருந்து கொண்டு பேசுவது சரியல்ல. கோவை சம்பவத்தை காரணம் காட்டி மாநில அரசை இழிவுபடுத்தி பேசுவதும் சரியல்ல. இடது சார்பு அரசியலுக்கு மக்கள் ஆதரவு அளிப்பதற்குச் சான்றாக, தென் அமெரிக்காவில் அதிபராக லூலா அதிபராக தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்றார் டி.ராஜா.

பேட்டியின்போது கட்சியின் மாநில துணைச் செயலர் மு.வீரபாண்டியன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டி.ஆர்.ரவீந்திரநாத் உள்ளிட்டோர் உடனிருந்தார்.

இஸ்லாமிய மத குருமார்களின் கருத்து வரவேற்கத்தக்கது

கோவை, அக்.31: கோவை கார் வெடிப்பு தொடர்பாக இஸ்லாமிய மத குருமார்களின் கருத்து வரவேற்கத்தக்கது என்று பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை கூறினார்.

கோவை, உக்கடம் கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோயில் முன் கடந்த 23-ஆம் தேதி கார் வெடிப்பு ஏற்பட்டு ஜமேஷா முபீன் என்ற இளைஞர் உயிரிழந்தார். இந்த வழக்கை தற்போது என்.ஐ.ஏ. விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், சம்பவ இடத்தை பாஜக மாநிலத் தலைவர் கே.அண்ணாமலை திங்கள்கிழமை பார்வையிட்டார். பின்னர் கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுடன் கோயிலில் நடைபெற்ற கூட்டுப் பிரார்த்தனையில் பங்கேற்றார்.

இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த 1998-ஆம் ஆண்டு நிகழ்ந்த குண்டு வெடிப்புக்கு பிறகு கோவையின் வளர்ச்சி பல ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றது. பின்னர் பலரது முயற்சியால் கோவை முன்னேறியது. இந்நிலையில், தற்போது நிகழ்ந்த கார் வெடிப்பு திட்டமிட்டபடி நடந்திருந்தால் கோவை நிச்சயமாக 20 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றிருக்கும்.

மதத்தின் அடிப்படையில் பிரிக்க நினைத்தாலும் கோவை மக்கள் ஒன்றாக இருப்பது ஆச்சரியமான விஷயம். வெடி விபத்துக்குப் பின்னர் கோவையில் உள்ள இஸ்லாமிய மதகுருமார்கள் பலர் நல்ல கருத்துகளை முன்வைத்துள்ளது வரவேற்கத்தக்கது. வன்முறையைக் கையிலெடுப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்கக் கூடாது என்பது எங்களது வேண்டுகோள். கூடிய விரைவில் இஸ்லாமிய குருமார்களை நேரடியாக சந்தித்து இதுகுறித்து ஆலோசிக்க உள்ளேன்.

மாநில அரசு தொடர்ந்து நன்றாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமே விமர்சனங்களை முன்வைக்கிறோம். குறைகளைக் கூற வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல. ஐஎஸ் அமைப்பால் மூளைச் சலவை செய்யப்பட்ட சில நபர்களைக் கண்காணிக்க வேண்டும் என்று கடந்த ஜூலை 19-ஆம் தேதி தமிழகத்துக்கு மத்திய உளவுத் துறை தகவல் அனுப்பியுள்ளது. அந்தப் பட்டியலில் தற்போது உயிரிழந்த ஜமேஷா முபீனின் பெயரும் இடம்பெற்றுள்ளது. மத்திய உளவுத் துறை எச்சரித்தும் கண்காணிக்காமல் விட்டதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றார்.

41 பத்திரிகையாளர்களுக்கு தலா ரூ.10,000 ஓய்வூதியம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வை, சென்னை தலைமைச் செயலகத்தில் ஏழு பத்திரிகையாளர்களுக்கு அதற்கான உத்தரவுகளை திங்கள்கிழமை வழங்கி தொடக்கிவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சி துறைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) எம்.எஸ்.சண்முகம், செய்தித் துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் உள்ளிட்டோர்.

சென்னை, அக். 31: ஓய்வு பெற்ற 41 பத்திரிகையாளர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் மாத ஓய்வூதியமாக வழங்கும் நிகழ்வை முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை தொடக்கி வைத்தார். சென்னை தலைமைச் செயலகத்தில் ஏழு பேருக்கு ஓய்வூதியத்துக்கான உத்தரவுகளை அவர் நேரில் அளித்தார்.

58 வயதைக் கடந்த பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.10 ஆயிரம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.4 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு விண்ணப்பங்களின் அடிப்படையில் ஓய்வூதியத்துக்கான உத்தரவு வழங்கப்படுகிறது.

அதன்படி, ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் 41 பேருக்கு நிகழாண்டில் ஓய்வூதியம் வழங்குவதற்கான உத்தரவுகள் தயார் செய்யப்பட்டன. இந்த உத்தரவுகள் வழங்கும் நிகழ்வை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை தொடக்கிவைத்தார்.

அதன்படி, ஏழு பேர் முதல்வரிடமிருந்து உத்தரவுகளை பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் எம்.எஸ்.சண்முகம், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

'ஏர்கன்' குண்டு பாய்ந்த சம்பவம்: தோட்ட குத்தகைதாரர் உள்பட இருவர் கைது

போலீஸாரால் கைப்பற்றப்பட்ட 'ஏர்கன்'.

பழனி, அக்.31: பழனி அருகே தோட்டக் காவலாளி மீது ஏர் கன் குண்டு பாய்ந்தது தொடர்பாக நிலத்தை குத்தகைக்கு எடுத்தவர் உள்பட இருவர் திங்கள்கிழமை கைது செய்யப்பட்டனர். ஏர்கன்னை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், பழனியை அடுத்த பெத்தயநாயக்கன்பட்டியில் தனியார் தோட்டக் காவலாளி கார்த்தி, கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏர் கன் குண்டு பாய்ந்து காயமடைந்தார். அவர் மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் குறித்து திண்டுக்கல் எஸ்.பி. பாஸ்கரன் தலைமையில் கூடுதல் எஸ்.பி. சந்திரன், டி.எஸ்.பி. சிவசக்தி உள்ளிட்டோர் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், தோட்டத்தை குத்தகைக்கு எடுத்திருந்த கும்பகோணம் திருவிலாங்குடியைச் சேர்ந்த மோகன்ராஜ் (35) சொந்தமாக ஏர் கன் வைத்திருந்ததும், அதை கவனக்குறைவாக லோடு செய்தபோது தவறி வெடித்ததில் கார்த்திக் மார்பில் பட்டு காயம் ஏற்பட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து திங்கள்கிழமை மோகன்ராஜ், அவருக்கு உதவியாக இருந்த மானூரைச் சேர்ந்த முருகன் மகன் கிருஷ்ணமூர்த்தி (34) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது கொலைமுயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மோகன்ராஜ், கிருஷ்ணமூர்த்தி.

இதுகுறித்து காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன் தெரிவித்ததாவது: ஏர் கன் என்பது கடைகளிலேயே விற்பனை செய்யப்படும் துப்பாக்கியாகும். இதை ரைபிள் கிளப்பில் பழகுவோர் பயன்படுத்துகின்றனர். ஏர் கன்னை பயன்படுத்தி சுட்டது சம்பந்தமாக தோட்டத்தை குத்தகைக்கு எடுத்தவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். முதலில் குற்றத்தை மறைக்க முயற்சி செய்தனர். பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஏர் கன்னை ஒப்படைத்தனர். தோட்டத்திலேயே தண்ணீர் நிரம்பியிருந்த தொட்டியில் ஏர் கன்னை மறைத்து வைத்திருந்தனர். அதில் பல்வேறு மாற்றங்கள் செய்துள்ளனர். இது எதற்காக என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இவர்கள் தோட்டத்தில் கண்ணி வைத்து முயல்கள் போன்றவற்றை பிடித்துள்ளனர். அதற்காக ஏர் கன்னை பயன்படுத்தியுள்ளனர். காயம் பட்ட கார்த்தி மீதும் கொலை உள்ளிட்ட இரு வழக்குகள் உள்ளன என்றார் அவர்.

பட்டா மாறுதலுக்கு ரூ. 6 ஆயிரம் லஞ்சம்: நில அளவையர், இடைத்தரகர் கைது

காரைக்குடி, அக். 31: சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் வீட்டின் பட்டா மாறுதலுக்காக ரூ. 6 ஆயிரம் லஞ்சம் வாங்கிய நில அளவையர், இடைத்தரகரை ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

காரைக்குடி கழனிவாசல் பகுதியைச் சேர்ந்தவர் திவ்யதர்ஷன் (38). இவர், தனது வீட்டின் பட்டாவை அவரது தாயின் பெயருக்கு மாற்றுவதற்காக காரைக்குடி நகராட்சியில் பணியாற்றும் நில அளவையர் சரவணனை அணுகினார்.

அப்போது, பட்டாவை மாறுதல் செய்து தருவதற்கு சரவணண், ரூ. 6 ஆயிரம் லஞ்சமாக கேட்டாராம்.

லஞ்சம் கொடுக்க விரும்பாத திவ்யதர்ஷன், இதுகுறித்து சிவகங்கையில் உள்ள ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸில் புகார் அளித்தார்.

அதன்பேரில், போலீஸார் ரசாயனப் பொடி தடவிய ரூ. 6 ஆயிரத்தை திவ்யதர்ஷனிடம் கொடுத்து அனுப்பினர். அதை காரைக்குடி நகராட்சி அலுவலகத்தில் வைத்து நில அளவையர் சரவணிடம், திவ்யதர்ஷன் கொடுத்தார். அப்போது, பணத்தை தனது இடைத்தரகர் மணியிடம் கொடுக்கும்படி சரவணன் கூறினார்.

இதையடுத்து, அங்கு மறைந்திருந்த ஊழல் தடுப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஜான் பிரிட்டோ, ஆய்வாளர்கள் கண்ணன், ஜேசுதாஸ் உள்ளிட்டோர் சரவணன், மணியை கையும், களவுமாக பிடித்து கைது செய்தனர்.

போலீஸார் சுட்டதில் உயிரிழந்த இருவரின் குடும்பங்களுக்கு தலா ரூ.3 லட்சம் இழப்பீடு

மனித உரிமைகள் ஆணையம் உத்தரவு

மதுரை, அக்.31: மதுரையில் போலீஸார் சுட்டதில் உயிரிழந்த இருவரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 3 லட்சம் இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு, மாநில மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டது.

இதுகுறித்து மக்கள் கண்காணிப்பகம் அமைப்பின் செயல் இயக்குநரும், மூத்த வழக்குரைஞருமான ஹென்றி டிபேன் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியதாவது:

மதுரை தெப்பக்குளம் காவல் நிலைய எல்லைக்குள்பட்ட ராமநாதபுரம் சாலையில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி அருகே, கடந்த 2010-இல் அப்போதைய காவல் உதவி ஆணையர் வெள்ளத்துரை துப்பாக்கியால் சுட்டதில், கிருஷ்ணாபுரம் காலனியை சேர்ந்த கவியரசு (30), ஒடைக்கரை பகுதியைச் சேர்ந்த முருகன் (34) ஆகிய இருவரும் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக கோட்டாட்சியர் நடத்திய விசாரணையில், உதவி ஆணையர் வெள்ளத்துரை, தற்காப்புக்காக துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என அறிக்கை அளித்தார்.

இதனிடையே, உயிரிழந்த முருகனின் தாய் குருவம்மாள், காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு புகார் மனு அனுப்பினார். அந்த மனு ஏற்கப்பட்டு காவல் உதவி ஆணையர் வெள்ளத்துரை, அவருடன் பணியாற்றிய உதவி ஆய்வாளர் தென்னரசு, தலைமைக் காவலர் கணேசன், காவலர் ரவீந்திரன் ஆகியோர் மீது விசாரணை நடத்தப்பட்டது.

மனுதாரரான குருவம்மாள் சார்பில் வழக்குரைஞர் சின்னராசா, மக்கள் கண்காணிப்பகத்தின் வழக்குரைஞர்கள் க.சு. பாண்டியராஜன், முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் வாதாடினர்.

இதையடுத்து, உயிரிழந்த கவியரசு, முருகன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 3 லட்சம் இழப்பீடு வழங்க மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டது. இந்தத் தொகையில், உதவி ஆணையர் வெள்ளத்துரையிடமிருந்து ரூ. 3 லட்சம், உதவி ஆய்வாளர் தென்னரசு, தலைமைக் காவலர் கணேசன் ஆகியோரிடமிருந்து தலா ரூ.1.50 லட்சத்தை சட்டரீதியாகப் பெற்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என உத்தரவில் தெரிவிக்கப்பட்டது. உதவி ஆணையர் வெள்ளத்துரை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பலர் உயிரிழந்தனர். அவர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

முருகனின் தாய் குருவம்மாள், வழக்குரைஞர்கள் சின்னராசா, பாண்டியராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மருத்துவக் கல்வி பொறுப்பு இயக்குநராக டாக்டர் சாந்தி மலர் நியமனம்

சென்னை, அக். 31: மருத்துவக் கல்வி பொறுப்பு இயக்குநராக டாக்டர் சாந்தி மலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை அப்பொறுப்பில் இருந்த டாக்டர் நாராயணபாபு திங்கள்கிழமை ஓய்வு பெற்றார். முன்னதாக, சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு, நாராயணபாபுவுக்கு சால்வை அணிவித்து, மலர்ச்செண்டு கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். ஓய்வு பெற்ற நாராயணபாபு 2014-இல் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வராகவும், 2016-இல் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வராகவும் இருந்துள்ளார். 2020 ஜூலை 2 முதல் மருத்துவக் கல்வி இயக்குநராக நாராயணபாபு இருந்துள்ளார். அவர் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து புதிய மருத்துவக் கல்வி இயக்குநரை நியமிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே பொறுப்பு இயக்குநராக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வராக உள்ள டாக்டர் சாந்திமலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொது அறிவிப்பு
சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், எருக்களைவெள்ளூர் கிராமம், சர்வே எண் : 156/2A, 2B மொத்த பரப்பு 2.29.0 ஹெக்டேர் நிலத்தில் கிராவல் குவாரி நடத்த அனுமதி வழங்கி சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு ஆணையத்தின் பரிந்துரை வழங்கப்படுகிறது. கடித எண். : SEIAA Vide Proposal Number EC. No. : SIA/TN/MIN/258987/2022. Dated : 03.06.2022

இப்படிக்கு
திரு. L.ஜெயசந்திரன்,
No.14/5, முத்து நகர்,
அவனியாபுரம்,
மதுரை மாவட்டம் - 625 012.

சுவாதி வழக்கில் கைதான ராம்குமார் இறப்பில் சந்தேகம்: விசாரணை நடத்த மனித உரிமைகள் ஆணையம் உத்தரவு

சென்னை, அக். 31: சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் இறந்த சம்பவத்தில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளதால், சுதந்திரமான விசாரணை நடத்த தமிழக அரசுக்கு, மாநில மனித உரிமைகள் ஆணையம் உத்தரவிட்டது.

சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில்மென்பொறியாளர்சுவாதி, கடந்த 2016-இல் வெட்டி கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் தென்காசி மாவட்டம் செங்கோட்டை வட்டம் டி.மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த ராம்குமார் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டார்.

சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராம்குமார், 18.9.2016-இல் மின் வயரை கடித்து தற்கொலை செய்து கொண்டதாக காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. ஆனால், ராம்குமார் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அவரது உறவினர்கள் குற்றம்சாட்டினர்.

இந்த விவகாரத்தை மாநில மனித உரிமை ஆணையத்தின் நீதிபதி துரை ஜெயச்சந்திரன் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்தார். சிறைத் துறை அதிகாரிகள், ராம்குமாரின் உடலை பிரேத பரிசோதனை செய்த அரசு மருத்துவர் உள்ளிட்டோரிடம் ஆணையம் விசாரணை மேற்கொண்டது.

ராம்குமார்

விசாரணை முடிவில் நீதிபதி துரை ஜெயச்சந்திரன் பிறப்பித்த உத்தரவில், சாட்சியம் மற்றும் ஆவணங்களை வைத்து பார்க்கும்போது உண்மையிலேயே ராம்குமார் மின் வயரை கடித்து தற்கொலை செய்து கொண்டாரா அல்லது வேறு யாரேனும் அவரது உடலில் மின்சாரத்தை பாய்ச்சினார்களா அல்லது எய்ம்ஸ் டாக்டர் சுதிர்குப்தா அளித்த அறிக்கைப்படி மூச்சுத்திணறல் காரணமாக இறந்தாரா என்பன உள்ளிட்ட பல்வேறு சந்தேகங்கள் இந்த ஆணையத்துக்கு எழுகின்றன.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட டாக்டர் செல்வக்குமார், பிரேத பரிசோதனை அறிக்கையில் மின்சாரம் தாக்கி ராம்குமார் இறந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், அவராகவே மின்சாரத்தை தனது உடலில் பாய்ச்சி இறந்தாரா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே, ராம்குமார் இறப்பில் தொடர்பாக உண்மையை கண்டறிய சுதந்திரமான விசாரணை மிக அவசியமாகிறது.

உண்மையிலேயே ராம்குமார் மின் வயரை கடித்து மின்சாரத்தை பாய்ச்சி தற்கொலை செய்து கொண்டாரா அல்லது ராம்குமாரின் தந்தை பரமசிவன் குற்றம்சாட்டுவது போன்று கொலை செய்யப்பட்டாரா என்பது குறித்து சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

ரூ.10 லட்சம் இழப்பீடு: ராம்குமாரின் தந்தை பரமசிவத்துக்கு இழப்பீடாக தமிழக அரசு ரூ.10 லட்சத்தை ஒரு மாதத்துக்குள் வழங்க வேண்டும். புழல் சிறையில் கைதிகளை கண்காணிக்க குறைவான எண்ணிக்கையிலேயே ஊழியர்களே இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ராம்குமார் மரணத்துக்கு சிறைக் காவலர்களை மட்டுமே குறை கூற முடியாது. தமிழக அரசுக்கும் இதில் பொறுப்பு உள்ளது. சிறையில் போதிய அளவில் அலுவலர்கள், ஊழியர்களை நியமிக்க வேண்டியது அரசின் கடமை. சிறையில் கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய போதுமான அதிகாரிகளை பணியமர்த்த வேண்டும் என அந்த உத்தரவில் தெரிவித்துள்ளார் மாநில மனித உரிமை ஆணையத்தின் நீதிபதி துரை ஜெயச்சந்திரன்.

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.
ஓங்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
CIN : U67100TZ2014PTC020363 பதிவு அலுவலகம் : 9, M.P. நகர், 1 வது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் - 641 607
பெருநிறுவன அலுவலகம் : C/515, கனகியா ஜில்லியான், LBS சாலை மற்றும் CST சாலை ஜங்ஷன், BKC அனெக்ஸ், ஈக்வினாக்ஸ் அருகில், குர்லா (மேற்கு), மும்பை - 400070. Email Id : mumbai@omkaraarc.com Mobile No. : +91-9833774478

பிற்சேர்க்கை - IV-A (பார்க்க - விதி 8(6)க்கான விதி விலக்கு)

[illegible]

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பெயர்கள்	சொத்து விபரங்கள்	சொத்தின் உரிமையாளர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அடிப்படை விலை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டேவணித் தொகை	ஆய்வு தேதி & நேரம்
1). P மணிமாறன் (கடன்தாரர்) 2). ஸ்ரீ கணபதி ட்ரேடர்ஸ் 3). சாந்தி M (கூட்டு கடன்தாரர்)	தமிழ்நாடு - 625 201, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுகா, தெப்பக்குளம் கிராமம், ஆண்டார் கொட்டாரம் பஞ்சாயத்து, கருப்பபிள்ளையேந்தல் கிராமம், R S எண். 2/1A ல் உள்ள 1080 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 159 மேற்கு பகுதி இடம் மற்றும் அதில் கதவு எண். 4/185 வைக்கொண்ட 696 சதுர அடி பரப்பளவு கொண்ட RCC கூரை வேய்ந்த ஒரு அடுக்கு குடியிருப்பு கட்டிடம் ஆகியன. எல்லைகளாவன - கிழக்கு - ப்ளாட் எண். 160 மற்றும் ப்ளாட் எண். 159 ன் கிழக்கு பகுதியில் உள்ள மீதி பாகம். மேற்கு - ப்ளாட் எண். 158, வடக்கு - கொண்டபொத்தான் எல்லை & சாலை, தெற்கு - சர்வே எண். 2/1A ல் உள்ள சாலை. கூகுள் அமைவிடம் : 9கு54'06.6"N 78கு11'02.5"E	திரு மணிமாறன்	தேதி 15.06.2020. 19.03.2020 ம் தேதியின் படி, ரூ. 19,99,398/- (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து முன்னூற்று தொண்ணூற்று எட்டு மட்டும்)	ரூ. 13,10,000/-	ரூ. 50,000/-	ரூ. 1,31,000/-	தேதி - 18.11.2022 நேரம் - காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

மின்னணு ஏல தேதி & நேரம் - 06.12.2022 காலை 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை.
விலைப்புள்ளி சமர்ப்பித்தல், பங்கேற்பதற்கான கடிதம் / KYC ஆவணங்கள் / டேவணித்தொகைக்கான சான்று ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 05.12.2022 மாலை 06.00 மணி வரை.

[illegible]

தேதி : 01.11.2022
இடம் : மும்பை

அதிகாரப்பூர்வ அலுவலர்
ஓங்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
(ஓங்காரா PS 33/2020-21 அறக்கட்டளை" ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)